கண்களில் மழைவரும் கார்த்திகைமாதம்
நெஞ்சினில் நினைவுகள் உர்வலம் போகும்
தென்றலை கல்லறை தூதென வீசும்
தேச தெருக்களில் கோலங்கள் போடும்

நீர் இன்றி அமையாது உலகு
உங்கள் நினைவின்றி விடியாத பொழுது
கல்லறை முன் கைய்கள் தொழும் போது
நாங்கள் தமிழர் என்று தலை நிமிர்ந்து கொள்ளும்
தாயக கனவுடன் வாழ்ந்த
உங்கள் நினைவுகள் எமை உந்தித் தள்ளும்

கண்களில் மழைவரும் கார்த்திகைமாதம்

வாசல் படி ஓரம் பாசம் பல சுமந்து
தேடும் விழி இங்கு பூத்திருக்கும்
வீசும் அணல் காற்றாய் செதி தனை அறிந்து
ஓடும் மனம் இங்கு தாத்திருக்கும்
தீபத்சுடர் போல அசையும் உம் சிரிப்பு
மீண்டும் ஒரு நாளில் பார்க்கும் மன விருப்பு
நெஞ்சினில் நெருப்பை முட்டுறதே
நினைவினை தொடர்ந்திட வழிகாட்டுதே

கண்களில் மழைவரும் கார்த்திகைமாதம்

எல்லை தினம் தாண்டி தொல்லை தரும் பகைவன்
கோபத்தை இதயத்தில் வரவுவைத்தே
வெல்லும் ஒரு நாளில் அவன் கொல்லை நீர் தேடி
வீரத்தால் அவருக்கே செலலுவைத்தே
உண்மை ஒளியோடு பரவும் உங்கள் அன்பு
ஈழம்பெற நீங்கள் உதிர்ந்திட்ட உயிர்ப்பு
நெஞ்சினில் நெருப்பை முட்டுறதே
நினைவினை தொடர்ந்திட வழிகாட்டுதே

கண்களில் மழைவரும் கார்த்திகைமாதம்